# சகவாழ்வு மற்றும் சமூக ஒற்றுமையை வலியுறுத்துவதில் சமயங்களின் வகிபாகம்: இஸ்லாம், இந்து, பௌத்த மற்றும் கிறிஸ்தவ சமயங்களின் கோட்பாடுகளை மையப்படுத்திய ஆய்வு.

Sheefa.M.I [1] & Ismiya Begum. M.S[2]

*[1&2] Department of Islamic Studies , South Eastern University of Sri Lanka*
*Email: ismiyams@seu.ac.lk*

**ஆய்வுச் சுருக்கம்** : சமயங்கள் வன்முறையையோ, விரோதத்தையோ ஒரு போதும் வளர்க்கவில்லை. மாறாக அன்பு, கருணை, பொறுமை, சமாதானம், விட்டுக்கொடுப்பு போன்ற அடிப்படைகளையே அனைத்து சமயங்களும் வலியுறுத்துகின்றன. இருப்பினும், இன்று தனிப்பட்ட நபர்கள் தொடக்கம் சமூகம், தேசியம், சர்வதேசம் வரை முரண்பாடுகள் தலைதூக்கியுள்ளன. இதற்கு அடுத்த சமயங்களின் போதனைகள் குறித்த சரியான புரதலின்மை ஓர் அடிப்படைக்காரணமாக இருக்கின்றது. ஒவ்வொறு சமயங்களும் மனித வாழ்க்கையை நெறிப்படுத்துவதில் தமக்கென சில தனித்துவமான கோட்பாடுகளைக் கொண்டுள்ளன. இருப்பினும் அவை குறித்து நேரான சிந்தனைகள் இன்மையால் சமயத்தை அடிப்படையாகக் கொண்டு முரண்பாடுகள் ஏற்படவும் அடுத்த சமயங்கள் மீதான தவறான புரிந்துணர்வை வளர்க்கவும் வழிசெய்கின்றது. இந்த அடிப்படையில் இவ்வாய்வானது கிறிஸ்தவம், இந்து, இஸ்லாம், பௌத் சமயங்கள் சகவாழ்வையும் சமூக ஒற்றுமையையும் வலியுறுத்தக் கூடிய போதனைளைக் கொண்டுள்ளனவா? என்பதை கண்டறிவதனை நோக்காகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்வு நூலக ஆராய்ச்சியை அடிப்படையாகக் கொண்ட பண்பு அடிப்படையிலான ஆய்வு முறையாகும். இவ்வாய்வுக்கான தரவு இரண்டாம் தர மூலாதாரங்களைப் பயன்படுத்தி பெறப்பட்டுள்ளது. சகவாழ்வினையும் சமூக ஐக்கியத்தினையும் வலியுத்துவதில் இஸ்லாம் தனித்துவமான கோட்பாடுகளைக் கொண்டுள்ளது என்பது கண்டறியப்பட்டது. மேற்குறிப்பிட்ட சமயங்களின் போதனைளைக் கடைப்பிடிப்பதன் மூலம் உலக சமாதானத்தை கட்டியெழுப்பி ஆரோக்கியமான சமூகத்தினைக் கட்டியெழுப்ப முடியும்.

***திறவுச் சொற்கள் :*** சகவாழ்வு, சமூக ஒற்றுமை, கோட்பாடுகள், இந்து சமயம், இஸ்லாம் சமயம், கிஸிஸ்தவ சமயம், பௌத்த சமயம்

## ஆய்வு அறிமுகம்

அனைத்து உலக சமயங்களும் உலக அமைதியை வலியுறுத்தி போதனைகளை வெளியிட்டுள்ளன. இன்றைய நவீன காலத்தில் மலிந்துள்ள வன்முறைகள், பாகுபாடு, இன மற்றும் மத முரண்பாடுகள் போன்றவற்றிலிருந்து சமூகத்தைப் பாதுகாப்பதற்காக அனைத்து மதங்களும் பல்சமய உரையாடல்களை நிகழ்த்துகின்ற போதும் சமூகத்தை அதன் தாக்கத்திலிருந்து பாதுகாக்க முடியாத ஒருநிலை காணப்படுகின்றுத (Nazi, et al.2018), (ரஜான், 2012). இவற்றிற்கு மேலால் பொதுவாக மதங்கள் மனிதர்கள் ஏனைய மனிதர்களுக்கு உதவி

செய்து சமூக ஒற்றுமையுடன் வாழ வேண்டும் என்பது தொடர்பாக எல்லா சமயங்களும் எவ்வாறான விடயங்களை போதிக்கின்றன என்பதை அறிதல் அவசியமாகும். அடிப்படையில் சமயங்கள் மக்களின் நல்வாழ்வுக்காக பல்வேறு அறக்கருத்துக்களையும் கட்டளைகளையும் போதிக்கின்றன. ஒவ்வொரு சமயத்தினுடைய வழிகாட்டி நூல்களும் பல்வேறு அறக்கருத்துக்களை தன்னகத்தே கொண்டுள்ளன (பிரஷாந்தன், 2015). இருப்பினும், ஒவ்வொரு சமயத்தையும் பின்பற்றுபவர்கள் தமது மதப்போதனைகள் தொடர்பான சரியான புரிதலின்மையாலும், அவற்றைச் சரியாகப் பின்பற்றாமையாலும் பல எதிர்மறையான விளைவுகளை உண்டாக்குகின்றனர். இது ஒவ்வொரு சமயத்திற்குள்ளேயும் இடம்பிடித்துள்ளதோடு பிற சமயங்களுக்கு மத்தியிலும் பரவி சமயங்களுக்கிடையிலான இணக்கப்பாடின்மை, சமய விட்டுக்கொடுப்பின்மை, தவறான புரிதல்கள் என பல குழப்பங்கள் அரங்கேறி வருகின்றன. இவை சகவாழ்வைப் பாதிக்கும் வகையில் தமது செல்வாக்கினைத் துளிர்விடச் செய்கின்றன. இவ்வாறான பிரச்சினைகளில் இருந்து விடுபட வேண்டுமெனில் முதலில் சமயங்களின் உண்மையான போதனைகள் என்ன என்பது குறித்த நேர் சிந்தனையை சமூகங்களின் மத்தியில் ஏற்படுத்த வேண்டிய தேவைப்பாடுள்ளது. இந்த அடிப்படையில் இஸ்லாம், இந்து, பௌத்தம், கிறிஸ்தவம் ஆகிய சமயங்களின் போதனைகள் சகவாழ்வுக்கும், சமூக ஒற்றமைக்கும் வழிகோலும் போதனைகளைக் கொண்டுள்ளனவா என்பதனைக் கண்டறியும் நோக்கில் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. சமயங்களை அடிப்படையாகக் கொண்ட இது குறித்த பல்வேறு ஆய்வுகள் இடம்பெற்றிருப்பினும் அவை பொதுவாக சமயங்கள் என்ற அடிப்படையிலும் தனிப்பட்ட சமயங்கள் குறித்த ஆய்வுகளாகவும் ஒரு சில சமயங்களை மாத்திரம் அடிப்படையாகக் கொண்ட ஒப்பீட்டு அடிப்படையிலான ஆய்வுகளாகவும் அமைந்துள்ளன. மட்டுமன்றி அவற்றுள் பல காலநீட்சியை கொண்டனவுமாகும். சகவாழ்வினைப் போதிப்பதில் சமயங்களின் வகிபாகம் குறித்த பல ஆய்வுகள் இடம்பெற்றிருப்பினும் சமூக ஒற்றுமையையும் இணைத்து இடம்பெற்ற ஆய்வுகள் மிக அரிதாகும். இந்த அடிப்படையில் இவ்வாய்வு இடைவெளிகளைப் பூரணப்படுத்துவதில் இவ்வாய்வு முக்கியம் பெறுகின்றது.

**ஆய்வுப் பிரச்சினை**

அனைத்து சமயங்களும் ஏதோ ஒரு வகையில் மக்களுக்கு தவறுகளில் இருந்து விடுபட்டு நல்வாழ்வு வாழ்வதற்கான போதனைகளையே முன்வைக்கின்றன. ஆனால், அவற்றைப் போதிக்கும் விதங்களும், முறைகளும் வெவ்வேறாக உள்ளன. சில சமயங்கள் சில விடயங்களை தடை செய்தும், இன்னும் சிலவற்றை ஏவியும் மக்களை நல்வழிப்படுத்தும் பாங்கினை உற்று நோக்கும் போது புரிந்து கொள்ள முடியும். நடைமுறைஇல் பார்க்கும் போது ஒவ்வொரு சமயங்களையும் பின்பற்றுபவர்கள் தமது மத போதனைகள் தொடர்பான சரியான புரிதலின்மையாலும், அவற்றைச் சரியாகப் பின்பற்றாமையாலும் பல குழப்பங்களுக்கு உள்ளாகின்றனர். இது ஒவ்வொரு சமயத்திக்குள்ளேயும் இடம்பிடித்துள்ளதோடு பிற சமயங்களுக்கு மத்தியிலும் பரவி சமயங்களுக்கிடையிலான இணக்கப்பாடின்மை, சமய

விட்டுக்கொடுப்பின்மை, தவறான புரிதல்கள் என பல குழப்பங்கள் அரங்கேறி வருகின்றன. இவை சகவாழ்வைப் பாதிக்கும் வகையில் தமது செல்வாக்கினை கொண்டுள்ளன. இதுவே ஆய்வுப் பிரச்சினையாகக் கொள்ளப்பட்டுள்ளது.

**ஆய்வின் நோக்கம்**

இஸ்லாம், இந்து, பௌத்தம், கிறிஸ்தவம் ஆகிய சமயங்களின் போதனைகள் சக வாழ்வுக்கும், சமூக ஒற்றுமைக்கும் வழிகோலுகின்றனவா என்பதைக் கண்டறிதல்

**ஆய்வு வினா**

இஸ்லாம், இந்து, பௌத்தம், கிறிஸ்தவம் ஆகிய சமயங்களின் போதனைகள் சக வாழ்வுக்கும், சமூக ஒற்றுமைக்கும் வழிகோலுகின்றனவா?

**ஆய்வு முறையியல்**

இது பண்புரீதியான ஆய்வாகும். இவ் ஆய்வில் இரண்டாம் நிலைத் தரவுகளாக இத் தலைப்புத் தொடர்பான நூல்கள், ஏற்கனவே வெளியிடப்பட்ட ஆய்வுகளின் உட்பரிமானங்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள் மற்றும் இணையதளம் என்பன மீளாய்வுக்குட்படுத்தப்பட்டு இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. பெறப்பட்ட தகவல்கள் விபரணப்பகுப்பாய்வு முறையியலைப் பயன்படுத்தி பகுப்பாய்வுக்குட்படுத்தப்பட்டு முடிவுகள் பெறப்பட்டுள்ளன.

**இலக்கிய மீளாய்வுகள்**

இந்த ஆய்வுக்காக தலைப்பு தொடர்பான பல இலக்கியங்கள் மீளாய்வுக்குட்படுத்தப்பட்டன. அதில் ஆறுமுக தாசன் (1986) "எழுதிய உலக மதங்கள்"எனும் நூல் காணப்படுகின்றது. இதில் உலகிலுள்ள மதங்கள் தொடர்பான பார்வையைக் கொண்டுவந்துள்ளார். ஆரம்பமாக மதம் மற்றும் மதத்திற்கும் மக்களுக்குமான தொடர்புகள், உறவுகள் பற்றி குறிப்பிடுவதோடு அனைத்து மதங்கள், அவற்றின் போதனைகள், கொள்கைகள் தொடர்பான விடயங்களை கொண்டுவருகின்றார். இதற்கு ஒவ்வொரு மதம் பற்றியும் அந்தந்த மதம் சார் தேர்ச்சியுள்ளவர்களை தேர்ந்தெடுத்து அவர்களின் மூலமாக எழுதியுள்ளார். இறுதியாக உலக மதங்களின் ஒருமைப்பாடுகளும் அடையாழப்படுத்தப்பட்டுள்ளன. 1963ல் பேராதனைப் பல்கலைக்களகத்தின் இந்து மாணவர் சங்கத்தால் எழுதப்பட்ட இந்து தர்மம் எனும் நூல் காணப்படுகின்றது. இது இந்து இஸ்லாமிய கலாசாரத் தொடர்புகள் தொடர்பாக குறிப்பிடப்படுவதோடு இந்து சமயம், அதன் கோட்பாடுகள், போதனைகள், உபநிடதங்கள், தெய்வ ஒருமைப்பாடு அதன் பரிணாமங்கள் தொடர்பாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. 20ம் நூற்றாண்டில் சமயங்களின் நிலைப்பாடு தொடர்பாகவும், சமயங்களுக்கும் பிற துறைகளுக்குமான தொடர்புகள் போன்றன உள்ளடக்கப்பட்டுள்ளன. இன்பகுமார் (2016) எழுதிய புத்த போதனைகள் எனும் கட்டுரையானது புத்த தர்மம், புத்த போதனைகள், கௌத்தமரின்


ISBN 978-624-5736-14-0

ஆரம்ப நாட்கள், அவர் பரிநிர்வாணமடைந்தமை, அதன் போதான போதனைகள் பஞ்சசீலக் கொள்கைகள் தொடர்பாகவும் விளக்கப்படுகின்றது.

ஜமீலா, (2012) எழுதிய நற்குணம் எனும் கட்டுரையானது இஸ்லாம் எவ்வாறான நற்குணங்களைப் போதிக்கின்றன, அவற்றின் நன்மைகள், பயன்கள் போன்ற விடயங்கள் தெளிவுபடுத்தப்படுகின்றன. இன்னும் முஸ்லிம்கள் பிற முஸ்லிம்களுடன் எவ்வாறான குணங்களுடன் நடந்துகொள்ள வேண்டும், முஸ்லிமல்லாதவர்களுடன் எவ்வாறு நல்ல முறையில் நடக்க வேண்டும் என்பது தொடர்பாகவும் குறிப்பிடப்படுகின்றது.

பழனியப்பன் (2016) எழுதிய பௌத்த சமய நூல்கள் எனும் ஆய்வுக் கட்டுரையானது பௌத்த சமய அறிமுகம், தோற்றம், வளர்ச்சி, எழுச்சி தொடர்பாக பேசுகிறது. இன்னும் துக்கம், துக்க உற்பத்தி, துக்க நிவாரணம் போன்ற உயர்வாய்மைகள் அவற்றின் பயன் தொடர்பாகவும், நற்காட்சி, நற்கருத்து, நல்வாய்மை, நற்செய்கை, நல்வாழ்க்கை, நன்முயற்சி, நற்கொள்கை, நல்லமைதி பற்றியும் அதன் பயன்கள் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. பௌத்தத்தின் கொள்கையான கொல்லாமை, கள்ளாமை, காமமின்மை, கள்ளுண்ணாமை, விலக்கப்பட்ட காலங்களில் உண்ணாமை, ஆடல் பாடல் கூத்துக்களை நாடாமை, ஒப்பனை செய்யாமை போன்ற விடயங்கள் பற்றியும் தெளிவுபடுத்தப்படுகின்றது. வினயபீடகா, சித்தபீடகா, அபிதம்மபீடகா ஆகிய முக்கிய நூல்கள் தொடர்பாகவும் பௌத்தத்தின் அடிப்படைகள், போதனைகள் பற்றியும் பேசப்படுகின்றது.

மலர் (2016) எழுதிய வாழ்வை நெறிப்படுத்தும் இந்து சமயம் எனும் கட்டுரையானது, மனிதர்களின் வாழ்க்கையை நெறிப்படுத்துவதற்கு இந்து சமயம் வழங்கியுள்ள போதனைகள், நற்குணங்கள், பிறருடன் நடந்து கொள்ள வேண்டிய முறைகள் ஒழுங்குகள் பற்றியும் இந்த போதனைகள் எந்த வித்தில் வாழ்வை நெறிப்படுத்தவல்லவை என்பது பற்றியும் விளக்குகின்றது.

பிரசாந்தன் (2015) எழுதிய "விழுமியக்கல்வியும் சமயமும்" எனும் கட்டுரையில் சமயங்கள் பற்றிய அறிமுகம், அவை மக்களுக்கு எதற்காக அருளப்படன, நோக்கங்கள், மக்களின் ஒழுக்க விழுமியங்களில் இவை எவ்வாறான தாக்கங்களை ஏற்படுத்தக் கூடியன என்பது பற்றியும், விழுமியக்கல்வி தொடர்பான முனைப்புக்களுடனேயே அனைத்து மதங்களும் உள்ளன என்பது பற்றியும் பேசுகின்றது. ரஹ்மான் (2011) எழுதிய "கடவுள் : இந்துக்களின் புரிதல்" எனும் கட்டுரையும், ரஜான் (2012) எழுதிய "ஆப்ரஹாமிய மதங்களின் அடிப்படை என்ன? எனும் கட்டுரையும், சத்ரியா (2020) எழுதிய "இந்து சமயம் போதிக்கும் ஒழுக்க நெறிகள்" எனும் கட்டுரையும், விஹார் (2015) எழுதிய "பௌத்தம் ஓர் அறிமுகம்" எனும் கட்டுரையும் இங்கே மீளாய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளன.

**ஆய்வின் பிரதான கண்டறிதல்கள்**

ஒவ்வொரு சமயத்தவரும் பிற சமயத்தவர்களுடன் அவரவர் கடமைகளைப் பாதுகாத்தும், உரிமைகளை மீறாமலும் சுமுகமாகவும் சுதந்திரமாகவும் வாழ்வதையே சகவாழ்வு என்கின்றோம்.


ISBN 978-624-5736-14-0

சகவாழ்வுக்கு அடிப்படையாக சமூக ஒற்றுமை அமைகின்றது. ஒவ்வொரு சமய, சமூக, கலாசாரப் பின்னணிகளைக் கொண்டவர்களும் ஏனைய சமய, சமூக, கலாசாரப் பின்னணிகளைக் கொண்டவர்களுடன் ஒற்றுமையாக வாழ வேண்டும் என்பது அனைத்து சமயங்களும் போதிக்கக் கூடிய ஒன்றாகவே உள்ளது (ஆறுமுகதாசன், 1986). இதனை இந்து, இஸ்லாம், பௌத்தம், கிறிஸ்தவம் ஆகிய மதங்களை மையமாகக் கொண்டு நோக்கலாம்.

**இந்துசமயம்**

ஒருத்தருக்கொருத்தர் நன்றியுணர்வோடு வாழவேண்டும் என்பதை இந்து மதம் சமூக ஒற்றுமைக்காக வேண்டி வழிகாட்டுகின்றது. பொதுவாக நன்மை செய்வதற்கு முடியாதவர்களாயினும் தீமை செய்வதை நிறுத்தி விடுங்கள், அதுதான் எல்லோரும் மகிழ்ச்சியடைத் தகுந்த குணம். அவ்வாறின்றி உங்களை நல்ல நெறியிலே செலுத்தும் வழியும் அதுதான் என்கின்றது இந்து மதம். இவ்வாறு “நன்றி” என்ற விடயமானது சகல சமயங்களிலும் அதிகளவு முக்கியத்துவம் பெற்ற ஒன்றாக காணப்படுகின்றது. அதிலும் இந்துக்களின் மத்தியில் அதிகளவு வலியுறுத்தப்பட்டதாகவும் உள்ளது. சமூக ஒற்றுமைக்கு வழிவகுக்கக் கூடிய விழுமியம் தொடர்பான பலவிதமான கருத்துக்களையும் சிந்தனைகளையும் எடுத்துக்கூறுவதாக இந்து மதம் விளங்குகின்றது (சத்ரியா, 2020). இந்து மதமானது பலகடவுள் கொள்கைகளையும் புனித நூல்களையும் ஏற்றுக் கொள்கின்றன. இந்த புனித நுல்கள் சிலவற்றில் மக்களை ஒற்றுமையாக வாழச் செய்வதற்கான வழிமுறைகள் பல குறிப்பிடப்பட்டுள்ளன. அவற்றுள் வேதங்கள் முதன்மையானவையாக உள்ளன. எல்லா மக்களும் ஒற்றுமையுடனும் இன்பமாகவும் வாழ வேண்டும் எனும் சிந்தனை வேதங்களில் முக்கியமானதொரு அம்சமாகும். பொதுவாக இந்துக்களின் புனித நூலான “பகவத்கீதையில்” பல்வேறு விதமான ஒழுக்க விழுமியக் கருத்துக்களும் அறம் தொடர்பான சிந்தனைகளும் இடம்பெற்றுள்ளமை சிறப்பம்சமாகும். இந்துசமய வேதங்கள் கூறும் சமூக நோக்கங்களை ஆராயும்போது உண்மையான சமயத்தின் நோக்கம் மனிதன் தனது அகவயமான நட்பண்புகளை வளர்த்துக்கொண்டு தன்னை ஒரு உண்மையான மனிதனாக மாற தூண்டுவதாக அறக்கருத்துக்கள் அமைகின்றன. மேலும் வேதங்கள் முதல் இக்காலத்தில் தோன்றிய நூல்கள் வரை எல்லாம் சமூக ஒற்றுமை, நல்லிணக்கம், ஒழுக்கம் சார்ந்த விடயங்களையே அதிகமாக கூறியுள்ளன (இந்து தர்மம், 1962-1963).

“ஒருமனிதனுக்கு செய்யும் சேவையானது இறைவனுக்கு செய்யும் சேவையாகும்” என கைள்ளீய உபநிடதம் கூறுகின்றது. மேலும் “ஏகம் சத்பிப்ராவகுதாவதந்தி” இவ்வாறு அழைப்பதனால் வேதங்கள் ஆரம்ப காலத்தில் பரம்பொருள் ஒன்றே என்ற நிலைப்பாட்டை கொண்டிருக்கின்றன. இந்தவகையில் இந்துமதமானது ஒரு இறைக்கொள்கை என்ற நிலையினை கொண்டுள்ளது. அதாவது பரம் பொருள் ஒன்று என்றும் அதன் வடிவங்களாக ஏனைய செயற்பாடுகள் என்பன அமையப் பெற்றுள்ளன. “கீதையில்” கிருஸ்ண பகவான் மனிதர்கள் என்னை பலவாறாக எந்த ரூபத்தில் வணங்கினாலும் அவர்களுடைய பக்தியை மேலோங்கச் செய்கின்றேன் என்று

அருளியுள்ளது. மனிதர்கள் மத்தியில் சமத்துவத்தைத் தெளிவுபடுத்தும் ஒரு கூற்றாக அமைந்துள்ளது. எனவே இதனடிப்படையில் பார்க்கின்றபோது இந்துசமயத்தில் தோற்றம் பெற்ற நூல்கள், வேதங்கள் என்பன மக்களிடையே பரஸ்பரம் ஒருமித்த தன்மையை ஏற்படுத்துவதையும், சமூகரீதியில் புரிந்துணர்வையும் ஒழுக்கரீதியான பண்பாட்டு அம்சங்களையும் எடுத்துக்காட்டுகின்றது. இந்து சமயத்தில் வேதங்களை பொறுத்தமட்டில் மனிதர்களிடையே மட்டுமன்றி பிற உயிரினங்களிடத்திலும் ஒற்றுமை நிலவ வேண்டும் என குறிப்பிடப்படுகின்றது. இதனை யசூர் வேதமானது "எல்லா உயிர்களையும் நாம் தோழமை நோக்குடன் பார்போமாக நாங்கள் அனைவரும் ஒருவரை ஒருவர் தோழமை நோக்குடன் நோக்குவோமாக என எடுத்தியம்பப்பட்டுள்ளது (யசூர் வேதம் 36:18).

உபநிடதம், மகாவாக்கியங்கள் "நானும் அது நீயும் அது எல்லாம் ஒன்று" என்னும் அனைவரையும் சமநோக்குடன் நோக்கும் உயர்நிலை அறத்தை போதிக்கின்றது. அதாவது அனைவரிலும் தெய்வீகம் உண்டு அனைவரையும் நேசி, அனைவரிடமும் அன்பாய் இரு என்னும் உயர்ந்த மனித நேயத்தை போதிக்கின்றது. குறிப்பாக இந்துசமயத்தில் "அன்பேசிவம்" என்ற மந்திரமானது உலகிலுள்ள சகல உயிர்களிடத்திலும் அன்பாய் இருத்தலை எடுத்துக்காட்டுகின்றது. அத்துடன் மனித உறவுகளின் வாழ்வியல் தத்துவங்களை விளக்கும் சைவம் மனிதரிடத்தில் வேறுபாடுகாட்டாமல் "தேவன் ஒருவனே" எனவும் "அவரை வழிப்படுபவர்களின் குலமும் ஒன்று" எனும் அம்சமும் எடுத்துக் காட்டப்படுகின்றது. இதனை "ஒன்றே குலம் ஒருவனே தேவனும் நன்றே நினை மீன் நமனில்லை நாணமே" (திருமந்திரம் : 2104) எனகுறிப்பிடப்படுகின்றது. அதாவது, இனம், மதம், சாதி ரீதியாக எந்த ஒரு வேறுபாடும் இருக்க கூடாது என எடுத்துக்காட்டி உலக சகோதரத்துவத்தை திருமூலர் முன்வைத்துள்ளார்.

இவ்வாறே சித்தாந்த சாஸ்திரங்களின் ஒன்றான சிவஞான சித்தியார் பிறசமயத்தவர் வணங்கும் கடவுளும் சைவர்களுடைய கடவுளும் ஒன்று என குறிப்பிடப்படுகின்றது. இதனை "யாதொரு தெய்வம் கொண்டீர் அத்தெய்வமாகி ஆங்கே, மற்றும் மாதொருபாகனார் தாம் வருவர்" எனும் அடிகள் விளக்கியுள்ளன. இது குறித்து இந்து சமயத்தில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது, "அன்பே சிவம்" என்ற மந்திரம் எல்லா உயிரிடத்திலும் அன்பாய் இருப்பதைக் குறிக்கின்றது. மேலும், மனிதர்களிடத்தில் மாத்திரமின்றி உயிர்களிடத்திலும் ஒற்றுமையை கடைபிடிக்க வேண்டும் என கூறுகின்றது. இன்னும் இம்மதம், "எல்லா உயிர்களையும் நாம் தோழமை நோக்குடன் பார்ப்போமால் நாங்கள் ஒருவரை ஒருவர் தோழமை நோக்குடன் நோக்குவோமாக என எடுத்தியம்பப்பட்டுள்ளது" (யசூர் வேதம் 36 : 18), (Prashanthan, 2015).

இதனை நோக்கும்போது இந்து சமயத்தினுடைய விசாலமான பார்வையும் அரவணைப்பு தன்மையும் தெளிவாக விளங்குகின்றது. இங்கு சமய காழ்ப்புணர்ச்சிக்கு அப்பாற்பட்ட மனித நேய அம்சங்கள் மக்களுக்கான ஒழுக்கவிழுமியக் கருத்துக்களை எடுத்துக் கூறுவதனை அவதானிக்கலாம். இந்து சமயத்திலே திருமணம் என்ற விடயமானது அதிகளவு ஒழுக்க விழுமியங்களை கொண்டதாக இருக்கின்றது. அதாவது இங்கு ஒருவனுக்கு ஒருத்தி என்ற

கொள்கையானது பின்பற்றப்படுகின்றது. குறிப்பாக இச்சந்தர்ப்பங்களில் சமயங்களை அடிப்படையாக கொண்ட வகையில் இடம் பெற்றாலும் குல, மத, சாதி, வர்க்க வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டவகையில் சடங்குகள் மற்றும் சம்பிரதாயங்கள் என்பன இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இந்து சமயத்திலே கடவுள் நம்பிக்கை என்பது அவரவர் விருப்பத்திற்கு ஏற்றவகையில் கடவுள் மீதான பக்தியை செலுத்தலாம். அதாவது எவரும் கட்டுப்படுத்தலன்றி சுயமாக தமது மதத்தினை பின்பற்றுவதற்கான சந்தர்ப்பங்கள் வழங்ப்படுகின்றன. "கீதையில்" கிருணபகவான் மனிதர்கள் என்னை எந்த உருவத்தில் வணங்கினாலும் அவர்களுடைய பக்தியை மேலோங்க செய்கின்றேன் என்று அருளியுள்ளதானது மனிதர்கள் மத்தியில் சமத்துவத்தை வலுப்படுத்தும் ஒரு கூற்றாக அமைந்துள்ளது. ஒரு சமூக நல்லுறவையும் சமூக ஒழுக்க விழுமியங்களையும் வேண்டியிருக்கும் சமயங்களில் இந்து சமயம் முக்கிய இடத்தை பெறுகின்றது. பொதுவாக பார்த்தால் இந்து சமயத்தில் எல்லா சமயத்தின் கருத்துக்களையும் பிரிவுகளையும் உள்வாங்கவும், ஆதரிக்கும் பண்புகள் மேலோங்கி காணப்படுகின்றது. குறிப்பாக இந்து சமயத்தில் ஒரு பொருள் கொள்கை, பலபொருள் கொள்கை போன்ற கருத்துக்களும் காணப்படுகின்றன. இவ்வாறு பன்மைத்துவத்திற்குள் ஒருமைபாட்டை கட்டியெழுப்பும் ஒரு சமயமாக இந்துசமயம் காணப்படுகின்றது.

"யாவார்க்கும் இறைவற்கு ஒரு பச்சிலை, யாவார்க்கும் பசுவிற்கு ஒரு வாயுரை, யாவார்க்கும் உண்ணும் போது ஒருகைபிடி, யாவார்க்கும் பிறர் இன்னுரைதானே…"

மேற்கூறப்பட்ட திருமந்திர பாடலடியின் மூலம் திருமூலர் ஜீவகாருண்யத்தை பற்றியும் அத்துடன் சமூக நல்லுறவும் ஒழுக்க விழுமியங்கள் பற்றியும் எடுத்துக் கூறுகின்றார். ஏனைய சமயங்களை விட அதிகளவான விழாக்கள் மற்றும் விரத முறைகள் இந்து சமயத்திலே காணப்படுகின்றது. குறிப்பாக விழாக்களில் தைப்பொங்கள், சித்திரைபுத்தாண்டு, ஆடிபதினெட்டு, தீபாவளி, நவராத்திரி, சிவராத்திரி போன்றனவும் விரதங்களை பொறுத்தமட்டில் சதூர்த்தி, கந்தசஷ்டி, திருவெம்பாவை, அமாவாசை போன்ற மக்கள் மத்தியிலே அதிகளவு அனுஷ்டிக்கப்படுகின்றன. எனவே, இவ்வாறான நிகழ்வுகள் உறவுகளை வளர்ப்பதிலும், பண்பாட்டு விடயங்களை பரிமாறவும், மகிழ்ச்சினையும், ஒற்றுமையினையும் ஏற்படுத்துவதாக காணப்படுகின்றது. அத்துடன் செவ்வாய் மற்றும் வெள்ளி கிழமைகளில் ஒவ்வொரு இந்துவும் கோயில்களுக்கு செல்லுதல் முக்கியமான கடமையாக உள்ளது. மக்களிடையே விழுமியத்தினை ஏற்படுத்துவதிலும் ஒத்துழைப்பையும், புரிந்துணர்வுகளையும் ஏற்படுத்துவதில் இந்து சமயமானது அதிகளவு பங்களிப்பினையும் முக்கியத்துவத்தையும் கொண்டுகாணப்படுகின்றது.

**இஸ்லாம்**

மனிதர்கள் ஏனைய மனிதர்களுக்கு உதவி செய்து நல்ல முறையில் வாழ்வதற்கும், சமூக ஒற்றுமையுடன் முன்மாதிரியாக வாழவும், ஒழுக்க விழுமியங்களை வளர்க்கவும் இஸ்லாமிய

சமயமானது அளப்பெரிய சேவையினை செலுத்துகின்றது. இஸ்லாமிய சமயம் சமாதானத்தையும் சமூக ஒழுக்கக் கட்டுப்பாடுகளையும் மிகவும் உறுதியாக எடுத்துக் கூறுகின்றது. ஆரம்பமாக இஸ்லாம் என்கின்ற சொல்லானது சாந்தி, சமாதானம் என்ற வகையில் அர்த்தப்படுகின்றது. அதேபோல ஒரு முஸ்லிம் இன்னுமொரு முஸ்லிமை சந்திக்கின்றபொழுது உங்களிடம் சாந்தியும் சமாதானமும் உண்டாவதாக என வாழ்த்துக் கூறுபவர்களாக உள்ளனர். எனவே, இஸ்லாம் அடிப்படையிலேயே சாந்தியினையும், சமாதானத்தையும் வலியுறுத்தி நிற்கின்றது. மதங்களினுடைய அடிப்படையான விடயங்களை எடுத்துக் கூறுவதில் புனித நூலான அல்குர்ஆன் மற்றும் ஹதீஸ் கிரந்தங்கள் பெரும் பங்குவகிக்கின்றன. அந்தவகையில் அல்குர்ஆன், அநாதைகள், ஏழைகள், வழிப்போக்கர்கள், யாசகர்கள், விடுதலையை விரும்பும் அடிமைகள் முதலியோருக்கு அறம் செய்ய வேண்டும் என்ற கருத்தை வழியுறுத்துகின்றது. குறிப்பாக ஒருவரை சமயமாற்றத்திற்கு நிர்ப்பந்திக்க கூடாது என இஸ்லாம் கூறுகின்றது. அதேபோல எனக்கு என்னுடைய மார்க்கம் எவ்வாறு முக்கியமோ அதுபோல உன்னுடைய மார்க்கம் முக்கியமானது என்ற கருத்தானது ஒவ்வொருவருக்கும் தத்தம் மனம் விரும்பும் சமயத்தை பின்பற்றும் உரித்துடையவர்கள் என்பதை வெளிக்காட்டுகின்றது (வதூத், 2019).

இஸ்லாம் சமயத்திலே உருவ வழிபாடு என்பது இல்லை. அதாவது இங்கு இறைவன் இருக்கின்றான் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் மட்டுமே தமது வழிப்பாடுகளை மேற்கொள்கின்றார்கள். ஆகவே இஸ்லாம் ஏனைய மதத்தினை பழிக்கவோ பாகுபாடு காட்டவோ கூடாது என்று வலியுறுத்துகின்றது. ஏனைய மதங்களைவிட இஸ்லாம் சமயத்தில் அதிகளவான கட்டுப்பாடுகளும் நெறிமுறைகளும் பின்பற்றப்படுகின்றன. அதாவது இங்கு ஒழுக்க விழுமியம் சார்ந்தவிடயத்திற்கு கூடுதலான முக்கியத்துவம் வழங்கப்படுகின்றது. முக்கியமாக இஸ்லாமிய சமயத்தில் நோன்பு, ஹஜ் போன்ற வழிபாட்டுமுறைகள் சர்வதேச ரீதியான சமூக ஒற்றுமையையும் அன்பினையும் சகோதரத்துவத்தினையும் வலியுறுத்துகின்றது (ரஜான், 2012).

இஸ்லாமிய சமயம் அடிப்படையில் “ஸகாத் எனும் ஏழை வரி” என்ற விடயத்தை வலியுறுத்துவதன் மூலம் சமூகத்தில் ஏற்றதாழ்வினை இல்லாது செய்வதற்கும் பணம் படைத்தவர்கள் தனது செல்வத்தின் ஒரு பகுதியை ஏழைகளுக்கு கொடுத்து சமூகத்தின் பொருளாதார ஏற்றதாழ்வை குறைக்கவும் உதவுவதுடன் ஏற்றதாழ்வுகளற்ற ஒரு செம்மையான சமூகத்தை உருவாக்கவும் சமூக நல்லுறவுடன் கூடிய விழுமியப் பண்பாட்டை கட்டியெழுப்பவும் இஸ்லாம் சமயம் அதிகளவு முக்கியத்துவம் கொண்டதாக காணப்படுகின்றது. இதனை அல்குர்ஆன், ‘மனிதர்களே! நிச்சயமாக நாம் உங்களை ஓர் ஆண், ஒரு பெண்ணிலிருந்தே படைத்தோம் நீங்கள் ஒருவரை ஒருவர் அறிந்துகொள்ளும் பொருட்டு. பின்னர், உங்களைக் கிளைகளாகவும், கோத்திரங்களாகவும் ஆக்கினோம் (ஆகவே) உங்களில் எவர் மிகவும் பயபக்தியுடையவராக இருக்கின்றாரோ, அவர் தாம் அல்லாஹ்விடத்தில், நிச்சயமாக மிக்ககண்ணியமானவர். நிச்சயமாக அல்லாஹ் நன்கறிபவன், (யாவற்றையும் சூழந்து) தெரிந்தவன் (அல்குர்ஆன் : 49:13) என்கின்றது. எனவே மேலே கூறப்பட்ட விடயமானது


ISBN 978-624-5736-14-0

அனைத்து மக்களும் சமமான முறையில் வாழ்வதற்கும், சமூகத்தில் ஏற்றதாழ்வுகளை இல்லாமல் செய்வதற்கும் அதிகளவு முக்கியத்துவம் கொடுப்பதனை அவதானிக்கலாம்.

இஸ்லாமிய ஒழுக்கவியலின் அடிப்படை இறைவனின் விருப்பத்தை உறுதியாக நிறை வேற்றுவதாகும். மனித குலத்தினுடைய விளக்கங்களுக்கும் புரிதலுக்குமாக குர்ஆன் பின்வருமாறு உபதேசிக்கின்றது, "(பெருமையோடு) உன் முகத்தை மனிதர்களைவிட்டும் திருப்பிக் கொள்ளாதே! பூமியில் பெருமையாகவும் நடக்காதே! அகப்பெருமைக்காரர், ஆணவங் கொண்டோர் எவரையும் நிச்சயமாக அல்லாஹ் நேசிக்கமாட்டான் (அல்குர்ஆன் : 31:18). இங்கு மனிதர்களோடு எவ்வாறு நடந்து கொள்ளவேண்டும் என்தனை இஸ்லாம் தெளிவுபடுத்துவதோடு பிரிவினையின் பக்கம் இட்டுச் செல்லக் கூடிய பெருமை, பிறரை மதிக்காமை, ஆணவம் போன்றவற்றை செய்ய வேண்டாம் எனக் கூறி சமூகத்தில் ஒற்றுமையாய் வாழ வகை செய்கின்றது.

இஸ்லாமிய சமூக அமைப்பின் சிறப்பியல்புகளாக ஈமான், சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம், நீதி, கூட்டுப்பொறுப்பு, தலைமைத்துவம், சமூக நீதி போன்றவை அதிகளவு வலியுறுத்தப்படுகின்றன. "நான் நற் குணங்களை பூரணப்படுத்தவே அனுப்பப்பட்டுள்ளேன்", "தான் விரும்புவதையே தன் சகோதரனுக்கும், விரும்பாதவரை உங்களில் யாரும் ஈமான் கொண்டவராக மாட்டார்" போன்ற புஹாரியில் பதியப்பட்ட நபி மொழிகளும் தனி நபரில் தொடங்கி சமூக ஒற்றுமைக்கு வழிகாட்டுகின்றது. இதனை தவிர நோன்பு என்பது இஸ்லாமிய சமயத்தில் உள்ள ஒரு முக்கியமான வணக்கமாகும். அதாவது, 30 நாட்கள் ஒருவேளை உணவை மட்டும் எடுத்து தம்மை உடலியல் ரீதியாகவும் உளவியல் ரீதியாகவும் செம்மைப்படுத்தி வழிப்படுத்துகின்றார்கள். இதன் மூலம் உடல், உள இச்சைகளைக் கட்டுப்படுத்தி நடுநிலையான வாழ்வை வாழவும், ஏழைகளின் பசிகளை உணர்ந்து கொள்வதற்கான ஒரு சந்தர்ப்பமாகவும் இது அமைகின்றது. குறிப்பாக ஏனைய சமயங்களிருந்து பார்க்கும் போது சற்று வேறுப்பட்ட ஒழுக்கவிழுமிய அம்சங்களை பிரதிப்பலிப்பதாக அமைகின்றது.

அல்குர்ஆன் மனித சமுதாயம் ஒன்றுதான் என்பதனை எடுத்துக்காட்டுகின்றது. அதாவது மனித சமுதாய உற்பத்தியானது ஒரே ஆத்மாவிலிந்து தோற்றம் பெற்றதும், ஒரே சமூகத்தினராகவும், ஓரேகுலம், ஓரே மார்க்கம் என்பவற்றை கொண்டவர்களாக காணப்படுகின்றனர். பொதுவாக முஸ்லிம்கள் கட்டாயம் 05 வேளை தொழ வேண்டும் அத்துடன் வெள்ளிக் கிழமைகளில் கட்டாயம் ஆண்கள் பள்ளிவாசலுக்கு செல்லவேண்டும் போன்ற அடிப்படையான கட்டுப்பாடுகளும் இஸ்லாம் சமயத்தை உயர்த்தி வைக்கின்றன. இதன் மூலம் யாவரும் இறைவலன் முன் சமமானவர்களே என்ற விடயம் தெளிவாக்கப்படுவதோடு சமூக ஏற்றதாழ்வற்று வாழவும் இவை வழிகாட்டுகின்றன.

நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு கூறினார்கள் "நல்ல நண்பன் கஸ்தூரி வியாபாரியைப் போலாவான். கஸ்தூரி வியாபரி உனக்கு அதனை (இனாமாகத்) தரலாம். அல்லது நீ அதனை அவனிடமிருந்து விலை கொடுத்து வாங்கலாம். அல்லது ஒருவேளை அவனிடமிருந்து நீ


ISBN 978-624-5736-14-0

நறுமணத்தையாவது நுகரலாம். கெட்ட நண்பன் துருத்தியில் ஊதுகின்ற கொல்லனைப் போலாவான். அவன் உனது ஆடையை எரித்து விடலாம். அல்லது நீ அவனிடமிருந்து துர்நாற்றத்தை நுகருவாய்" (அறிவிப்பவர் அபூ மூஸா அல் அஷ்அரீ, ஆதாரம், புகாரி, முஸ்லிம்). தனி மனித சீர்திருதத்திற்கும் சீரழிவுக்கும் உள்ளமும் சூழலும் அடிப்படைக் காரணங்களாக அமைகின்றன. மேற் குறிப்பிட்ட ஹதீஸ் தனிமனித வாழ்வில் சூழல் ஏற்படுத்தும் பாதிப்புப் பற்றி விளக்குகிறது. நபி(ஸல்) அவர்கள் அதனை அழகிய உதாரணத்தினூடாக விளக்குகிறார்கள். சூழல் எனும்போது பெற்றார், உற்றார், உறவினர், சுற்றத்தார், நண்பர்கள் கருத்திற் கொள்ளப்படுகின்றனர். ஒரு குழந்தையின் வாழ்வில் ஆரம்பமாக பாதிப்பை ஏற்படுத்துவோர் பெற்றவர்களாவர். எனவே இவ்வாறாக சமூக ஒழுக்கநெறிகளையும் விழுமியக்கருத்துக்களையும் தன்னகத்தே கொண்டதாக இஸ்லாம் சமயம் காணப்படுகின்றது (ஜமீலா, 2021).

**கிறிஸ்தவம்**

கிறிஸ்தவர்களின் சமயம் கூறுகின்ற அடிப்படை கொள்கை "மனிதன் இறைவனின் சாயலில் படைக்கப்பட்டவன்" ஆவான் என்பதாகும். யேசுகிறிஸ்து இறை மகனாக மனிதனாக இவ்வுலகில் அவதரிக்கின்றார். இந்தப் பின்னனியில் மற்றவர்கள் அல்லது மற்ற மனிதர்களை இறைவனின் சாயலாக பார்க்கின்ற கண்ணோட்டம் கிறிஸ்தவ சமயத்தில் வலியுறுத்துவதானது சமூக ஒற்றுமைக்கும் மக்களை நல்வழிப்படுத்தவும் உதவியாக அமைகின்றது. இங்கு இறைவனின் தன்மை மனிதனிலே வியாபித்திருக்கின்றது. அதாவது சகோதரத்துவம், அன்பு, இரக்கம், சகிப்புத்தன்மை என்பன மனித சமூகத்தின் மீது ஏற்படுத்தப்படுகின்றன. இச்சமயத்தில் இரக்கம், இறைவன் மீது அன்பு காட்டுதல், தூய்மை, மனித சமூகத்தை நேசித்தல் போன்ற விடயங்களை அடிப்படை அம்சமாக கொள்ளப்படுகின்றன. குறிப்பாக கிறிஸ்தவ சமயத்தில் புனித நூலாக "பைபிள்" என்பது காணப்படுகின்றது. ஒவ்வொரு கிறிஸ்தவர்களும் ஞாயிற்றுக்கிழமைகளில் தேவாலயங்களுக்கு செல்லுதல் முக்கியமானவிடயமாகும் (ஆறுமுகதாசன், 1986).

கிறித்தவம் ஓரிறைக் கொள்கையுடைய (Monotheism) சமயமாகும். தமிழில் கிறித்தவம், கிறித்துவம், கிறிஸ்தவம் என்றும் குறிப்பிடுவர். நாசரேத்தூர் இயேசுவின் வாழ்வையும் அவரது போதனைகளையும் மையப்படுத்தி விவிலிய புதிய ஏற்பாட்டின் படிசெயற்படுகிறது. கிறிஸ்தவர் இயேசுவை மெசியா மற்றும் கிறிஸ்து என்னும் அடைமொழிகளாலும் அழைப்பதுண்டு. இவ்விரு சொற்களின் பொருளும் "திருப்பொழிவுபெற்றவர்" (அபிஷேகம் செய்யப்பட்டவர்) என்பதாகும். மெசியா என்னும் சொல் எபிரேய மொழியிலிருந்தும் கிறிஸ்து என்னும் சொல் கிரேக்க மொழியிலிருந்தும் பிறந்தவை (கிரேக்கம்: ஊாசளைவழள் - ஆநளளயைா என்ற எபிரேயச் சொல்லின் மொழிபெயர்ப்பு). சுமார் 2.4 பில்லியன் உறுப்பினர்களைக் கொண்டு (உலகமக்கள் தொகையில் 33.3வீதம்) உலகின் பெரிய சமயமாகக் கிறிஸ்தவம் காணப்படுகிறது. கிறிஸ்தவம் பல உட்பிரிவுகளைக் கொண்டுள்ளது. இதில் கத்தோலிக்க திருச்சபை மிகப் பெரியதாகும். கிறிஸ்தவம் கி.பி. முதலாம் நூற்றாண்டில் யூத மதத்தின் உட்பிரிவாக காணப்பட்டிருந்ததாலும், யூதர்கள் எதிர்பார்த்த மீட்பர் கிறித்து என கிறித்தவர்கள் நம்புவதாலும் யூத புனித நூலை

பழைய ஏற்பாடு என்னும் பெயரில் விவிலியத்தின் ஒரு பகுதியாக ஏற்கின்றனர். யூதம் மற்றும் இஸ்லாம் போல கிறிஸ்தவமும் தன்னை ஆபிரகாம் வழி வந்த சமய நம்பிக்கையாகக் கொள்வதால் அது ஆபிரகாமிய சமயங்களுள் ஒன்றாகக் கருதப்படுகின்றது. பத்துக் கட்டளைகள் என்பது நன்னெறி மற்றும் வழிபாடு குறித்த விவிலிய அறிவுரைத் தொகுப்புகளுள் முதன்மையானவை. இது யூதம் மற்றும் பெரும்பாலான கிறித்தவ சபைகளின் அறநெறிப் படிப்பினையில் மைய இடம் பெறுகிறது. பத்துக் கட்டளைகள் தொகுப்பு இரு பிரிவாக உள்ளது. முதல் பிரிவில் மூன்று கட்டளைகள், இரண்டாம் பிரிவில் ஏழு கட்டளைகளும் உள்ளன. முதல் மூன்று கட்டளைகளும் இறைவனை அன்பு செய்து வழிபடுகின்ற கடமைகளை எடுத்துக் கூறுகின்றன. எஞ்சிய ஏழு கட்டளைகளும் மனித சமூகத்தின் நலம் பேணுதல் பற்றிய கடமைகளை எடுத்துரைக்கின்றன (ரஜான், 2012).

அவற்றை உண்மையான கடவுளை நம்பி ஏற்றிடுக (போலி தெய்வங்களை ஒதுக்குதல்), ஆண்டவரின் பெயரை வீணாகப் பயன்படுத்தல் ஆகாது, ஓய்வு நாளைத் தூய தாகக் கடைப்பிடி, உன் தந்தையையும் தாயையும் மதித்து நட, கொலை செய்யாதே, விபசாரம் செய்யாதே, களவு செய்யாதே, பொய்ச் சான்று சொல்லாதே, பிறர் மனைவியை விரும்பாதே, பிறர் உடைமையை விரும்பாதே என நோக்கலாம். மேற்கூறிய பத்துக் கட்டளைகளயும் வரிசைப்படுத்துவதில் கிறித்தவ சபைகளுக்கிடையே சிறுவேறுபாடுகள் உண்டு. நற்செய்திகளின்படி, கிறித்து இச் சட்டங்களை இரண்டு முதன்மைக் கட்டளைகளுக்குள் அடக்குகிறார். அவை:

- மனிதர் கடவுளைத் தம் முழு மனதோடும் ஆற்றலோடும் அன்பு செய்ய வேண்டும்.
- மனிதர் தம்மைத் தாமே அன்பு செய்வது போல பிறரையும் அன்பு செய்ய வேண்டும்.

நம்பிக்கை அறிக்கையில் அடங்கியுள்ள முதன்மை சமயக் கொள்கைகளாவன:

- தந்தையாம் கடவுள் உலகைப் படைத்தவர் என்பதில் நம்பிக்கை இயேசு கிறித்து கடவுளின் மகன், உலகத்தைப் பாவத்திலிருந்து மீட்க மனிதராகப் பிறந்தவர் தூய ஆவி மனிதரைப் புனிதராக்குகின்றார்.
- கிறித்துவின் சாவு, அவர் பாதாளத்தில் இறங்கியது, உயிர்த்தெழுதல், மற்றும் விண்ணேற்றம்
- திருச்சபையின் புனிதமும் புனிதர்களுடனான ஒன்றிப்பும்
- கிறித்துவின் இரண்டாம் வருகை, உலகத் தீர்ப்பு மற்றும் இறந்தோர் உயிர்த்தெழுவர் என்னும் நம்பிக்கை.

இயேசு கிறித்து கடவுளின் மகன், கடவுளால் திருப்பொழிவு பெற்றவர் (மெசியா) என்ற நம்பிக்கை கிறித்தவ சமயத்தின் மையக் கொள்கை ஆகும். உலக மக்கள் அனைவரையும் பாவத்திலிருந்து மீட்கும் பொருட்டு கடவுள் தம் மகன் இயேசுவை அபிஷேகம் செய்தார் என்றும், இவ்வகையில் இயேசுகிறித்து பழைய ஏற்பாட்டில் முன் கூறப்பட்ட இறை வாக்குகளை நிறைவேற்றினார் எனவும் கிறித்தவர்கள் நம்புகின்றனர். மெசியாகுறித்து கிறித்தவர்கள் கொண்டுள்ள புரிதல் அக்கால

யூதர்களின் புரிதல்களிலிருந்து வேறுபட்டுள்ளது. மனிதரின் பாவங்களைப் போக்கி, அவர்களை இறைவனோடு ஒப்புரவாக்கி, அவர்களுக்கு மீட்பையும் முடிவில்லா நிலை வாழ்வையும் வழங்க வந்தவரே இயேசு மீட்பளிக்கின்ற அந்த இயேசுவின் சாவையும் உயிர்த்தெழுதலையும் நம்பி ஏற்றிட மக்கள் அழைக்கப்படுகிறார்கள் என்பது கிறித்தவரின் நம்பிக்கை.

கிறிஸ்தவத்தில் அனைத்து படைப்புகளிலும் உயர்ந்த படைப்பு மனிதன் என்பதும் மனிதன் தனியே இருப்பது இறைவனுக்கு விருப்பம் இல்லை என்பது தொடக்க நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே இறைவன் மனிதனை குடும்ப வாழ்வுக்கும் சமூகவாழ்வுக்கும் அழைக்கின்றார் என்பதை தெளிவாக்குகின்றது. இதன்படி சமூகவாழ்வின் வெற்றிக்காக சுயநலத்தை உடைத்தெறிந்து அர்ப்பணிப்புடன் வாழ்வது முக்கியமாகும். இதற்காக இறை அன்பிலும் இறை இரக்கத்திலும் வாழ்வை கட்டியெழுப்புதல் மிக உன்னதமான விடயமாகும். அன்பை முதன்மைப்படுத்தி நீதியாக செயற்படுவதால் சமூகத்தின் பொது நலனையும் உண்மையான அமைதியையும் ஒழுக்கவிழுமியத்தையும் கட்டியெழுப்பலாம் என திருவிபிலியச் சிந்தனை கூறுகின்றது.

“கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல்” எனும் பழைய ஏற்பாட்டின் சட்டத்திற்கு அப்பால் சென்று கிறிஸ்துவின் போதனைகளும் வாழ்க்கையின் முன்மாதிகளினதும் வழியாக முழுமையாக மாற்றி அமைத்து ‘உங்கள் பகைவரிடம் அன்பு கூறுங்கள் உங்களை துன்புறுத்துவோருக்காகவும் இறைவனிடம் வேண்டுங்கள்’ (மத்தேயூ 05:43) என்ற கருத்தின் ஊடாக சகோதரத்துவ அன்பின் புதிய கண்ணோட்டத்தினை கிறிஸ்துவின் “மழை பொழிவில்” காணக் கூடியவாறு உள்ளது. ஏனைய சமயங்களை காட்டிலும் இச்சமயத்தில் கிறிஸ்மஸ் என்ற விழா மாத்திரமே அனைவராலும் கொண்டாடப்படுகின்ற ஒரு முக்கியமான விழாவாக உள்ளது. அதாவது யேசு கிறிஸ்து பிறந்த தினத்தினை நினைவு கூறும் வகையிலே உலகலாவியமக்களால் அனுஷ்டிக்கப்படுகின்றது.

பொதுவாக இன்று ஒரு மதத்தினுடைய விழுமியங்கள் மற்றும் நெறிமுறைகள் என்பன இன்னொரு சமயத்தினுடைய விடயத்தில் தாக்கத்தினை செலுத்துவதை காணலாம். அதாவது இன்று இந்து, இஸ்லாம் சமயங்களில் கோயில் மற்றும் பள்ளிகளுக்கு செல்லும் போது தூய்மையுடனும் பாதனிகள் இல்லாமல் தான் செல்ல வேண்டும். இம்முறையானது அவர்களின் ஒழுக்கம், நெறிமுறையாக பார்க்கப்படுகின்றது. ஆனால் இவ்வாறான முறைகள் கிறிஸ்தவ மதங்களில் காணப்படுவதில்லை. இந்து, இஸ்லாம் மற்றும் கிறிஸ்தவமதங்களில் ஒரேவிதமாக நோன்புபிடிக்கும் வழிமுறைகள் பின்பற்றப்படுகின்றன. மன்னிப்பு என்ற முறையானது இன்று அதிகளவு கிறிஸ்தவ மதத்தில் கடைப்பிடிக்கப்படுகின்றது. அதாவது எவராவது தவறு அல்லது பிழையாக நடக்கின்றபோது பாவமன்னிப்பு என்ற ஒழுங்குமுறையானது காணப்படுகின்றது. இங்கு 07 தடவைஅல்லது 70 தடவை ஒருவருக்கு மன்னிப்பு வழங்கலாம் என்று இம்மதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**பௌத்த மதம்**

பௌத்த மதம் பொது நலப் பண்பிலும் சமூக ஒற்றுமையுடன் வாழ வேண்டும் என்றபதிலும் பரிபூரணத்திலும் இணையற்ற ஒரு சிறந்த அறநெறியைக் கொண்டுள்ளது என்பதில் ஐயமில்லை. இது மதகுருமார்களுக்கும் சாதாரண மக்களுக்கும் வெவ்வேறான நெறியை விளக்குகின்றது. ஆனால் பௌத்தம் ஒரு சாதாரண தார்மீகப் போதனைகளைவிட தூய்மையானது. ஒரு பௌதன் இவ்வறநெறிகளை பின்பற்றும்போது தனக்கும் மற்ற உயிர்களுடனான நிலவுகைக்கும் நலம் சேர்க்கவல்லதாக காணப்படுகின்றது. அவற்றை விரிவாக நோக்கலாம்,

- **பிற உயிர்களிடத்தில் அன்பு செலுத்துதல்.**

  இது எல்லா மதத்தோராலும் பின்பற்றப்படும் கொள்கையாகும். உலகில் காணப்படும் அனைத்து மனிதர்களிடமும், உயிர்களிடத்திலும் அன்புடனும் பாசத்துடனும் நடந்து கொள்வது நல்லொழுக்கங்களில் ஒன்றாக காணப்படுகின்றது. பௌத்த மதம் சமூக ஒற்றுமையுடன் வாழவேண்டும் ஆகையால் "எந்த உயிர்களையும் கொல்லுதலைத் தவிர்த்தல்" எனும் ஒழுக்கத்தைக் கொண்டு காணப்படுகின்றது. புத்த வாழ்வை ஏற்று நடக்கும் ஒருவர் கட்டாயமாக இதனைப் பின்பற்ற வேண்டும் என குறிப்பிடப்படுகின்றது (Sakyamuni Puddha Vihar, 2015).

- **உண்மை பேசுதல்.**

  இது குறித்து பௌத்த மதத்தில் கூறப்பட்டுள்ளதை நோக்குவோமானால், அட்டசீலம் எனப்படும் எண்வகை வழிகளில் ஒன்றாக இதனைக் கருதுகின்றது. பயனற்றதும், கடுமையானதும், பொய்யானதுமான சொற்களை கூறாமலிருக்கவும் என குறிப்பிடுகின்றது (Inbakumar, 2018). இது சமூக ஒற்றுமைக்கு வழியமைக்கும் என்தனாலாகும். பௌத்தர்கள் புத்தரையே வணங்குகிறார்கள். இந்து மதத்தில் காணப்பட்ட ஒழுங்கீனங்களைக் களைந்து ஒழுக்க நெறியை முன்வைத்ததே பௌத்தமாகும். அதனால் அதிகளவான சீடர்கள் புத்தரை வழிப்பட்டு அவரையே பின்பற்றலாயினர் (துனியா, 2021).

- **சகோதரத்துவத்தைப் பேணல்.**

  பௌத்த மதமானது இது பற்றி பின்வருமாறு குறிப்பிடுகின்றது, பௌத்தன் ஒருத்தன் பிறப்பால் அன்றி ஒழுக்கத்தாலே உயர்ந்தவன் ஆகின்றான் எனப் போதிக்கின்றது. இதனால் சாதியில் உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்ற கோட்பாட்டுக்கே பௌத்தத்தில் இடமில்லை. இதனாலேயே தலைசிறந்த அகிம்சா மூர்த்தியாக புத்தர் விளங்குகிறார் (பழனியப்பன், 2016).

- **வணக்கங்களில் ஈடுபடுதல்.**

  பௌத்த மதங்களில் வணக்கங்களில் ஈடுபடுவது சமூக ஒற்றுமையுடன் வாழ்வதற்கான வாய்ப்பை வழங்கும் ஒன்றாக பார்க்கப்படுகின்றது. பௌத்தர்கள் கடவுள் நம்பிக்கை அற்றவர்கள். எனினும் சாதாரணமாக சிங்கள மக்கள் இந்துக்


ISBN 978-624-5736-14-0

கடவுளை வழிபடுவதோடு பௌத்த ஆலயங்களிலும் அவற்றின் வழிபாட்டை அங்கீகரித்துள்ளனர். புது வருடப் பிறப்பு, எசல பெரகரா போன்றவை இந்துக்களினதும் பௌத்தர்களினதும் வணக்கமாகவும், பெருவிழாவாகவும் கொண்டாடப்படுகிறது.

- **எளிமையான வாழ்வைக் கடைபிடித்தல்.**

  பௌத்தர்களைப் பொறுத்த வரையில் எளிமையாக வாழ்வதே இவர்களது இலட்சியமாகும். உண்ணும் உணவு, உடுக்கும் உடை, உறங்கும் இடம் ஆகியவற்றில் மாத்திரமின்றி ஏனையவற்றுள்ளும் எளிமையாக வாழ்ந்து உயர்ந்த சீலங்களைக் கடைபிடிக்குமாறு இவர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். மேலும் பிச்சை எடுத்து வாழும் வாழ்வு பெரிதும் பின்பற்றப்பட்டது (Buddha Vihar, 2015).

- **நன்மையான விடயங்களில் ஈடுபடல்.**

  இவ்விவிடயத்தில் பௌத்த கொள்கையை பார்ப்போமானால், பௌத்த துறவிகள் தோழர்களாகவும், வழிகாட்டிகளாகவும் மட்டுமல்லாது மற்றவர்களுக்கு நன்மையும், நம்பிக்கையும் வளர வாய்ப்புத் தருகிறார்கள். "நற் செயலை சாதாரணமாக நினைத்து எதுவும் எனக்குப் பயன் தராது என்று சொல்லாதீர்கள், சீராகத் தொடர்ந்து வரும் சிறு துளிகள் கூஜாவில் தண்ணீரை நிரப்புவது போல அறிஞர்கள் நல்வாழ்வை சிறிது சிறிதாக அடைகிறார்" என குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் அட்ட சீலம் எனப்படும் ஒழுக்கத்தில் "நற்செய்கை" பற்றிக் குறிப்பிடும் போது பிறரை துன்புறுத்தாமலும், களவாடாமலும், நன்னெறி தவறாமல் இருத்தல் வேண்டும் எனக் குறிப்பிடப்படுகின்றதானது சமூக ஒற்றுமையுடன் வாழ வழிகாட்டியாக அமைகின்றது (Puddha Vihar, 2015).

- **ஜீவகாருண்யம்.**

  பௌத்தம் போதிக்கும் 5 நற்குணங்களில் ஒன்றாகவே "எந்த ஒரு உயிர்களையும் கொல்லுதலைத் தவிர்த்தல்" காணப்படுகின்றது. இக் கொள்கையானது அனைத்து பௌத்தர்களும் கடைபிடிக்கும் பிரதான விடயமாகும். இவ்வாறே மிருக பலி, வேள்வி ஆகியவற்றையும் புத்தர் கண்டித்தார். இவர்கள் உயிர்களிடத்தில் அதிக அன்பு காட்டுவதனால் உணவுக்காக கூட உயிர்களைப் பிரிப்பதில்லை. (Inbakumar, 2016)

**பரிந்துரைகள்**

- அனைத்து சமயங்களும் ஏதோ ஒரு வகையில் மக்களுக்கு தவறுகளில் இருந்து விடுபட்டு நல்வாழ்வு வாழ்வதற்கான போதனைகளையே முன்வைத்தாலும், அவற்றைப் போதிக்கும் விதங்களும், முறைகளும் வெவ்வேறாக உள்ளன. சில


ISBN 978-624-5736-14-0

சமயங்கள் சில விடயங்களை தடை செய்தும், இன்னும் சில சிலவற்றை ஏவியும் மக்களை நல்வழிப்படுத்தும் பாங்கினைக் காணலாம்.

- ஒவ்வொரு சமயத்தையும் பின்பற்றுபவர்கள் தமது மத போதனைகள் தொடர்பான சரியான புரிதலின்மையாலும், அவற்றைச் சரியாகப் பின்பற்றாமையாலும் பல எதிர்மறையான விளைவுகளை உண்டாக்குகின்றனர்.
- சகவாழ்வினை வலியுறுத்துதல் என்ற விடயத்தையும் தாண்டி இந்த சமயங்கள் வேறு எவ்வாறான போதனைகளில் ஒன்றுபடுகின்றன என்பது தொடர்பாக ஆய்வு செய்தல்.
- தடை செய்யப்பட்ட விடயங்களினடிப்படையில் இந்த சமயங்கள் எவ்வாறு ஒன்றுபடுகின்றன என்பது தொடர்பாக ஆய்வு செய்தல்.
- இவ் ஆய்வில் குறிப்பிடப்பட்டுள்ள சமயங்கள் தவிர ஏனைய சமயங்களிலும் சகவாழ்வுக்கான முன்னேற்பாடுகள் போதிக்கப்பட்டுள்ளனவா என ஆய்வு செய்தல்.

**முடிவுரை**

உலகில் காணப்படும் மதங்கள் வேறுபட்டுக் காணப்பட்டாலும் அம்மதத்தை பின்பற்றும் மனிதர்கள் சமூக ஒற்றுமையுடன் வாழ வேண்டும் என்பதற்காகவே ஒவ்வொரு மதமும் வெவ்வேறான நல்லொழுக்க கொள்கைகளை முன்வைக்கின்றன. மனிதன் நல்லொழுக்கங்களையும் கடைபிடிக்காது தீய செய்களில் ஈடுபடக்காரணம் சீரிய நம்பிக்கைகள் உருவாக்கப்படாமையும் சிறந்த நெறிப்படுத்தலுக்கு உட்படாமையுமே ஆகும். மாறாக அவனின் தீய செயல்களுக்குக் காரணம் அவன் பின்பற்றும் மதம் அல்ல. பௌத்தம், இந்து, இஸ்லாம், கிறிஸ்தவம் ஆகிய மதங்களை வைத்து நோக்கும்போது இவை மூன்றுமே நல்லொழுக்கங்கள் மூலமாக சமூக ஒற்றுமையுடனும் சகவாழ்வுடனும் வாழ வேண்டும் எனப் போதிக்கின்றன. இதில் இஸ்லாத்தின் போதனைகளும், அணுகு முறைகளும் இவ்வனைத்திற்கும் அதிகூடிய முக்கியத்துவம் வழங்கக் கூடியதாகவும், வேறுபட்டதாகவும் உள்ளதை அறிய முடிகின்றது.

**உசாத்துணைகள்**


Nazi, Muhammad Zaman, Abdur Rashid Qadri, & Farman Ali. “The role of religion in establishing peacefulcoexistence in society.” *Journal of Islamic Thought and Civilization* 8, no. 2 (2018): 163–182.

இன்பகுமார், ஜே.எம்., (2016). புத்தரின் கொள்கைகள். இந்து மாணவர் சங்கம். பேராதெனிய பல்கலைக்கழகம். https://www.google.com/amp/s/inbariya.wordpress.com.

பழனியப்பன்.எம்., (2016). பௌத்த சமய நூல்கள். p. http://nakkeran.com.

பிரசாந்தன். (2015). விழுமியக் கல்வியும் சமயமும். https://teachsrilanka.blogspot.com/2015/06/blog-post.html?m=1.

தர்மம். (1963). இந்து தர்மம். university of peradheniya: இந்து மாணவர் சங்கம்.

மலர்.எம்., (2016). வாழ்வை நெறிப்படுத்தும் இந்து சமயம். www.maalaimalar.com.

ஆறுமுகநாதன், கே.(1986). உலக மதங்கள். பண்டதரிப்பு: மகளிர் கல்லூரி.

ஜெமீலா. எம், (2012). நற்குணம். www.islamkalvi.com.

வெப்துனியா. (2021). கௌதமரின் வாழ்வும் போதனைகளும்.. https://m-tamil.webdunia.com.

http://www.virtualvinodh.com.

சத்திரியா. ஏ.பீ., (2020). இந்து மதம் போதிக்கும் ஒழுக்க நெறிகள். p. www.maalaimalar.com.

விஹார், வீ.பீ., (2015). பௌத்தம் ஒரு அறிமுகம் . http://santhavasalbuddhavihar.blogspot.com.

ரஹ்மான், ஆர். ஏ., (2011). கடவுள் ஹிந்துக்களின் புரிதல். http://sunmarkam.blogspot.com/2011/05/blogpost.html?m=1.

ராஜன். வீ., (2012). ஆபிரஹாமிய மதங்களின் அடிப்படை என்ன?

Rahman, R. A. (2011). கடவுள் ஹிந்துக்களின் புரிதல். pp. http://sunmarkam.blogspot.com/2011/05/blogpost.html?m=1.

Rajan, V. (2012). ஆபிரஹாமிய மதங்களின் அடிப்படை என்ன? p. http://www.virtualvinodh.com.

Sathriya, A. B. (2020). இந்து மதம் போதிக்கும் ஒழுக்க நெறிகள். p. www.maalaimalar.com.

Vihar, S. B. (2015). பௌத்தம் ஒரு அறிமுகம் . p. http://santhavasalbuddhavihar.blogspot.com.

Webduniya. (2021). கௌதமரின் வாழ்வும் போதனைகளும். pp. https://m-tamil.webdunia.com.


ISBN 978-624-5736-14-0